முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1338

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.05.2023,** திங்கட்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவசியாக வாழும் தேசிகனே
பெருமைமிக்க தொண்டர்களைக் கொண்ட
பிரணவக்குடில் படைத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 15 ம் நாள், 29.05.2023, திங்கட்கிழமை)
வரமென அரங்கன் உன் தர்மம்
வையகத்தை ஆண்டு வர
3. பெருமைமிக்க தர்மவான்கள் படை பெருகி
பேருலகம் தர்ம ஞான ஆட்சிப்பெறும்
ஆட்சிக்கு மாற்றங்கள் தரவும்
ஆளுமைக்கு நல்ஞானம் தரவும்
4. மாட்சிமைபட கலியினில் அவதாரம் புரிந்த
மகான் அரங்கன் மார்க்கமே யுகத்தை மாற்றும் உயர்மார்க்கமாகும்
உண்மைபட சன்மார்க்க நெறி பின்பற்றி
உலகோர் தொடர்ந்து வந்தால்
5. துன்பமான நிலைகள் அனைத்தும் அகன்றோடி
தூயஞான ஆட்சியாக உலகம் மாற்றம் பெறும்
மாற்றத்தை தரும் மகத்துவம் கொண்ட ஞானி மகான் அரங்கனே
மக்களெல்லாம் இதை உணர்ந்து தெளிந்து
6. வகைபட பிரணவக்குடில் நோக்கி
வணங்கி வந்து அரங்கன் திருவடிப்பற்றி
ஆசி தீட்சையோடு அறத்தைக் கைக்கொண்டால்
அகிலமே தர்மஞான ஆட்சிக்கு தகுதிபெறும்
7. தகுதி கூடி ஞானத் தலைமைகளாகப் பெருகி
உலகோர் வணங்கி அமைதி பாதுகாப்புப் பெறும்
உத்தமமான ஆறுமுகன் என் ஆட்சி
உயர்ஞான ஆட்சியாக மாற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—